# 03-05-2026

## *பாஸ்க்கா காலம் ஐந்தாவது வாரம் ஞாயிற்றுக்கிழமை*

***திருப்பலி முன்னுரை:***

*"வழியும் உண்மையும் வாழ்வும் நானே!"*

*உண்மைக்குரியவர்களே,*

*ஆண்டவர் இயேசுவின் பெயரால், பாஸ்காக் காலத்தின் ஐந்தாம் ஞாயிறு திருப்பலிக்கு உங்கள் அனைவரையும் வரவேற்கிறோம். இயேசுவே நம் வழியும் உண்மையும் வாழ்வுமாக இருக்கிறார் என்பதை உணர இன்றைய திருவழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கிறது. இயேசு தந்தையினுள்ளும் தந்தை இயேசுவினுள்ளும் ஒன்றித்திருப்பதை நம்புமாறு நாம் அழைக்கப்படுகிறோம். மனிதராய் வந்த இறைமகனில் செயல்பட்ட இறைத்தந்தையைக் கண்டுகொள்ள இயேசு நமக்கு அழைப்பு விடுக்கிறார். மனிதராய் பிறந்து நம்மிடையே வாழ்ந்த இயேசுவில் வெளிப்பட்ட கடவுளின் அன்புக்கு நம்மை முழுவதும் அர்ப்பணிப் போம். கிறிஸ்து இயேசுவின் வழியாய் உண்மை கடவுளைக் கண்டு நிலைவாழ்வைப் பெற்றுக்கொள்ள வரம் வேண்டி, இந்த திருப்பலியில் பங்கேற்போம்.*

***இறைமக்கள் மன்றாட்டு:***

*1. உண்மை வழியே இறைவா,*

*திருச்சபையின் மக்களை உமது வழியில் நடத்தி, நிலைவாழ்வைப் பெற்றுக்கொள்ள உதவும் வரத்தை எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவருக்கும் வழங்குமாறு உம்மை மன்றாடுகிறோம்.*

*2. உண்மை ஒளியே இறைவா,*

*இந்த உலகில் உம்மைப் பற்றிய உண்மையை ஏற்காமலும், புரிந்து கொள்ளாமலும் வாழும் அனைவரின் உள்ளங்களிலும் உமது ஒளியை வீசி, அவர்களுக்கு விசுவாசத்தை ஊட்டுமாறு உம்மை மன்றாடுகிறோம்.*

*3. உண்மை வாழ்வே இறைவா,*

*எம் நாட்டு மக்களுக்கு பணியாற்ற தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் மக்களவை உறுப்பினர் கள் அனைவரையும் உமது வழியிலும் உண்மையிலும் வழிநடத்தி, எங்கள் வாழ்வை வளமாக்குமாறு உம்மை மன்றாடுகிறோம்.*

*4. உண்மை உயிரே இறைவா,*

*உலகெங்கும் பரவி வரும் பயங்கரவாதம், மதவாதம், இனவாதம் போன்ற தீமைகள் நீங்குமாறு, மக்களின் உள்ளங்களில் அமைதியையும் அன்பையும் விதைத்து உயிரூட்டு மாறு உம்மை மன்றாடுகிறோம்.*

*5. உண்மை நிறைவே இறைவா,*

*எம் பங்குத்தந்தை, அருட்சகோதரிகள், பங்கு மக்கள் அனைவரும், இயேசுவின் உண்மை வழியில் நடந்து, நீர் அளிக்கும் நிலைவாழ்வைப் பெற்றுக்கொள்ள உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.*